**I.A. 02/2019 in OS.57/2019**

**28.11.2023** **உத்தரவு**

மனுதாரர்கள் தரப்பு வாதம் கேட்கப்பட்டது. மனுதாரர்களின் மனுவில் மனு சொத்து ரோட்டினை ஒட்டி உள்ளதால் எப்படியாவது அபகரிக்க வேண்டும் என்ற கெட்ட எண்ணம் கொண்டு மனு சொத்தில் எதிர்மனுதாரர்கள் 14.02.2019 ந் தேதி அத்துமீறி நுழைந்து ஆக்கிரமிப்பு செய்ய முயற்சித்ததை மனுதாரர்கள் தடுத்து நிறுத்தியதாகவும், ஆதனால் மனு சொத்தில் மனுதாரர்களின் நிம்மதியான அனுபவத்தில் எதிர்மனுதாரரோ அல்லது அவரது ஆட்களோ, ஏஜெண்ட்டுகளோ, எவ்வித்திலும் இடைஞ்சல் செய்யாமல் இருக்க வேண்டி எதிர்மனுதாரர்களுக்கு எதிராக வழக்கு முடியும் வரை நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் வேண்டி மனுதாக்கல் செய்துள்ளதாக குறிப்பிடப்பட்டுள்ளது.

மேற்படி அதனை பார்க்கும்போது மனுதாரர்களின் மனு சொத்தில் எதிர்மனுதாரர்களுக்கு உரிமை இருப்பதாகக் கூறிக் கொண்டு ஆக்கிரமிக்க முற்பட்டதை மனுதாரர்கள் தடுத்து நிறுத்தியதாக குறிப்பிட்டுள்ளதை பரிசீலிக்கையில் அசல் வழக்கில் இருதரப்பிலும் சாட்சிகளை விசாரித்து அவர்கள் மூலம் தாக்கல் செய்யப்படும் ஆவணங்களை பரிசீலனை செய்த பின்புதான் இறுதி முடிவை எட்ட முடியும் என்று இந்நீதிமன்றம் கருதுகிறது. மேலும், எவ்வகையில் மனுதாரர்களுக்கு இழப்பு ஏற்பட்டுள்ளது என்பதையும் மனுதாரர்கள் தரப்பில் மெய்ப்பிக்கவில்லை (Prima facie Balance inconvenience Irreparable loss) என்றும், முதல் தோற்ற வழக்கும் சமச்சீர் நிலையும் மனுதாரர்களுக்கு ஆதரவாக இல்லை என்றும், மேலும் மனுவில் கோரியுள்ள பரிகாரமும், அசல் வழக்கில் கோரியுள்ள பரிகாரமும் ஒரே மாதிரியாக இருப்பதாலும், இம்மனுவை அனுமதித்தால் அசல் வழக்கிற்கு பாதகம் ஏற்படும் என்றும், மேலும், அசல் வழக்கில் இருதரப்பினரையும் முழு விசாரணை செய்த பிறகு தான் இவ்மனுவிற்கு ஒரு தெளிவான தீர்வு ஏற்படும் என்பதை கருத்தில் கொண்டும், மேலும் அசல் வழக்கின் இறுதி தீர்ப்புக்கு பாதகம் ஏற்படுத்தும் இம்மனுவினை செலவுத் தொகையின்றி தள்ளுபடி செய்யலாம் என்று இந்நீதிமன்றம் தீர்மானிக்கிறது.

மேலும் மாண்புமிகு மெட்ராஸ் உயர் நீதிமன்ற முன்தீர்ப்புரையான,

**The Bank Of Tokyo Mitsubishi ... vs Spartex Ceramics India Limited**

**2007 (3) MLJ 203**

என்ற வழக்கில் வழங்கிய தீர்ப்பில்

(Para 14)−These reliefs granted by the learned Single Judge at the interim stage is nothing but the prayer in the suit itself which has to be considered only at the ultimate stage of final decree. We are, therefore, of the considered opinion that the learned Single Judge, without going into the legal proposition involved in this regard, has granted the main relief itself which is sought in the suit at the interim stage, which in other words, tantamounts to a pre−trial decree.

என்ற முன்தீர்ப்புரையின் படி பார்க்கையில் மனுவில் கோரியுள்ள பரிகாரமும், அசல் வழக்கில் கோரியுள்ள பரிகாரமும் ஒரே மாதிரியாக இருப்பதால் இம்மனுவை தள்ளுபடி செய்வதுதான் நீதியின் நலனுக்கு உகந்தது என்று இந்நீதிமன்றம் கருதுகிறது.

முடிவாக, இம்மனு தள்ளுபடி செய்து உத்தரவிடப்படுகிறது. செலவுத் தொகை இல்லை.

S GANESH Digitally signed by S GANESH Date: 2023.11.28 12:03:13 +0530

PDM,(FAC).

JKM.